# நடப்பு நிகழ்வுகள் மார்ச் 01.03.2018

- 2018 ஆம் ஆண்டின் கலாச்சார விழாவான "நைல் இன் இந்தியா" எகிப்து நாட்டில் நடைபெற்றது.
- முதல் முறையாக சவூதி அரேபியா பெண்களுக்கு ராணுவத்தில் சேர அனுமதி அளித்துள்ளது.
- இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலம் சதாராவில் மிகப் பெரிய உணவு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவுடன் "லேமித்யா 2018" (Lamitya 2018) என்ற பெயரில் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்ட நாடு செசல்ஸ் ஆகும்.
- ஜிம்னாஸ்டிக்ஸ் உலகக் கோப்பையில் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண் அருணா புத்தா ரெட்டி ஆவார்.
- இந்தியாவின் முதல் விமானப் போக்குவரத்து பல்திறன் மையம் (Aviation Multi Skill development centre) துவங்கப்பட்டுள்ள இடம் சண்டிகர் ஆகும்.
- சிவில் கணக்குகள் தினம் (Civil Accounts Day) மார்ச் 1 அன்று கொண்டாடப்படுகிறது.
- இந்தியா – நேபாள நாடுகளுக்கிடையே 7 வது சிறந்த மனிதர்கள் குழு கூடுகை "நடைபெற்ற இடம் காத்மண்டு நோபளம் ஆகும்.
- இந்தியாவில் முதல் முறையாக "பண்டிகூட்" (Bandicoot) எனப்படும் மனிதக் கழிவை அகற்றும் ரோபோ இயந்திரத்தை கேரளா மாநிலம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Devopment Bank (ADB) யின் பங்குதாரர் நாடுகளில் இந்தியா இரண்டாமிடம் 2nd பெற்றுள்ளது.
- அனைவருக்குமான உள்ளடங்கிய இணையதள சேவைப் பட்டியலில் (Inclusive Internet Index 2018) இந்தியா 47 வது இடம் பெற்றுள்ளது.
- பிப்ரவரி 28 அன்று "ஸ்ரீஜன்" (SRIJAN) எனும் திட்டத்தை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் இரயில்வே அமைச்சகம் ஆகும்.
- தமிழகத்தில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்தவும், அதனை கண்காணிக்கவும் அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான குழுவின் தலைவராக R. வாசுகி நியமிக்கப்பட்டுள்ளார்.